1971 ஜூலை 29]

வில்லை, விரிவுபடுத்த வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது இருக்கின்ற இடத்திலே பல அடுக்கு மாடிகள் கட்டினால் போதுமான இடவசதி கிடைக்கும். மேலும், பணம் கொடுத்துச் சேருவதற்கும் பலர் தயாராக இருக்கிறார்கள். நூற்றுக்கணக்கானவர்களுக்கு இடம் கிடைக்காத நிலை இருக்கிறது. ஆகவே, பல அடுக்கு மாடிகள் கட்டி அபிவிருத்தி செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இப்போதே அங்கு நாற்பது லட்சம், ஐம்பது லட்சம் ரூபாய் செலவில் பல அடுக்கு மாடிக் கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. எவ்வளவுக்கெவ்வளவு உயரமாகக் கட்டிக் கொண்டு போனாலும், பரவலாக இருப்பதில் ஏற்படும் நன்மை இதில் ஏற்படாது.

திரு. கோவை செழியன்: தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கிற சென்னை பெரிய மருத்துவமனை நகரத்தின் மத்திய பகுதியில் இருக்கிறது. காற்று அனைத்தும் கெட்டுவிடுகிறது. "ஏர் பொல்யூட்" ஆகி "க்ராஸிக் டிசீஸ்" உண்டாகிறது. ஆகவே, தொத்து நோயாளிகளைத் தனியாக ஒரு மருத்துவமனையில் சேர்க்கும் ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இப்போதே கூட கடுமையான நோய்களுக்கென்று தனித்தனி ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. காச நோயாளிகளுக்குத் தாம்பரத்திலே டி.பி. ஆஸ்பத்திரி ஒன்று இயங்கிக்கொண்டிருக்கிறது: அதேபோல கடுமையான தொத்துநோய்களுக்கு "இன்ஃபெக்ஷியஸ் டீஸீஸஸ் ஹாஸ்பிடல்" தண்டையார்பேட்டையில் ஒன்று இயங்கிக் கொண்டிருக்கிறது. வேறு சில நோய்களுக்கு வேறு சிறப்பு மருத்துவமனையில் சிகிச்சை செய்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக நோயாளிகளை வேறு இடங்களுக்கு அனுப்புவது என்பது பல நேரங்களில் முடிவதில்லை.

செங்கிப்பட்டி காசநோய் மருத்துவமனை

*535 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1969–70-ம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்திலுள்ள செங்கிப் பட்டி காசநோய் மருத்துவமனைக்கு அரசாங்கம் அளித்துள்ள மானியத்தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ரூ. 44,000 (ரூபாய் நாற்பத்து நான்கு ஆயிரம்).

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, செங்கிப்பட்டி காசநோய் மருத்துவமனை இந்தியத் துணைக்கண்டத்திலேயே சிறப்பு வாய்ந்த காசநோய் மருத்துவமனை என்று கூறப்படுகிறது. ஆகவே, மேலும் அதிகமான படுக்கை வசதிகள் செய்து கொடுப்பதற்கு அரசு நிதி உதவி செய்வதுபற்றி ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்போது செங்கிப்பட்டியிலே இருக்கிற அந்த மருத்துவமனையில் போதுமான படுக்கைகள் இருக்கின்றன. படுக்கை இல்லையென்ற பெரிய குறை காண்பதற்கு அவசியம் இல்லை. மாறாக, நிர்வாகச் செலவுகளுக்கு நிலங்கள் மூலம் வருகின்ற வருமானத்தில் குறைகள் ஏற்பட்டிருக்கின்றன என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குறைபாட்டை நீக்கினால் மருத்துவமனை நன்றாக இயங்கும். மேலும் காச நோயாளிகளை நீண்ட நாட்களுக்குப் படுக்கையில் படுக்க வைத்து சிகிச்சை அளிக்காமல், சில வகையான ஆபரேஷன்கள் மூலம்—சர்ஜிகல் ஆபரேஷன்—சிகிச்சை அளித்தால் நோய் குணமாகிறது. அப்படி சர்ஜிகல் ஆபரேஷன் சிகிச்சை ஏற்படுமானால் அதற்கான முயற்சிகள் மருத்துவமனையின் நிர்வாகக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, இந்தக் காச நோய் மருத்துவமனை நிதி உதவியை மாநில அரசாங்கத்திடமிருந்து பெறுகிறதா? அல்லது, மத்திய அரசாங்கத்திடமிருந்து பெறுகிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, என்னிடத்தில் உள்ள விவரப்படி மாநில அரசிடமிருந்துதான் நிதி உதவி பெறுகிறது. மேலும், தனியார்கள் சிலர் நன்கொடையும் அளித்திருக்கிறார்கள். சிலர் நன்கொடையாக நிலம், சொத்துக்கள் முதலியவை எழுதி வைத்திருக்கிறார்கள். அவற்றிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தின் மூலமும் இந்த மருத்துவமனை இயங்கிக் கொண்டிருக்கிறது.

Provision of gratuity to Industrial workers

*536 Q.—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the Government received representation from Madurai on 4th April 1971 in respect of a legislation providing for gratuity to Industrial workers; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, 4–4–1971-ல் பல தொழிற்சங்கங்களின் சார்பில், கேரளத்தில் இருப்பதுபோல கிராஜுடி சட்டம் தமிழகத்தில் கொண்டுவர வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, சென்னையில் 10–4–1970 அன்று நடந்த தென் மண்டலத் தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் பணிக்கொடை நிதி ஒன்றை ஏற்படுத்த மத்திய சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட வேண்டும் என்று இந்த அரசு கருத்து தெரிவித்தது. அப்போதுதான் நிறுவனத்தின் நிதிநிலை இடர்பாடுகள் காரணமாக தொழிலாளர்